## சீதாவக பிரதேச சபை

## கொழும்பு மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஒக்டோபர் 22 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஒக்டோபர் 20 ஆந் திகதியன்றும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கல்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சீதாவக பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் தவணை அறவீட்டின் அடிப்படையில் உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ரூபா 11,934,000 பெறுமதியான கம்பெக்டரின் பெறுமதியை அறவிடக்கூடிய பயன்பாட்டுச் சேவைக் கணக்கு மற்றும் மாகாண சபை கடன் கணக்கில் கணக்கிலிடவில்லை. மேலும், 2018 மே மாதம் தொடக்கம் 20 தவணைப் பணமாகிய ரூபா 4,734,000 பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தில் எதிரீடு செய்யப்பட்ட போதும் அதற்கான சீராக்கல் குறித்த கணக்குகளில் மேற்கொள்ளப்படவில்லை. | சரியாகக் கணக்கிலிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஐயவினா ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் நாட்குறிப்பின் மூலம் இறுதிக் கணக்குகளில் திருத்தப்படும். |

### 1.3.2 எதிர்பாராப் பொறுப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கலு அக்கல கிராமத்தின் வினோத பூங்கா ஒன்றை நடாத்தும் கம்பனி வினோத வரியைச் செலுத்தாததால் அதற்கு எதிராக அவிசாவளை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வினோதப் பூங்காவின் உரிமையாளராலும் சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் இதுவரை அவ் வழக்குகள் இணக்கம் காணப்படாதிருந்தன. | அறவிட வேண்டிய வினோத வரியை அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்குச் செலவு ரூபா 84,000 ஆகும். இதுவரை வழக்கு இணக்கத்திற்குள்ளாகி தீர்ப்பு வழங்கப்படவில்லை. தீர்ப்பு வழங்கப்பட்டதும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 127, 128 ஆம் பிரிவுகள் | | சீதாவக பிரதேச செயலகப் பிரிவின் 26 மயானங்கள் மற்றும் பாதுக்கை பிரதேச செயலகப் பிரிவின் 27 மயானங்களைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முடிவடையாது இருந்தன. | சுவீகரிப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | சீதாவக பிரதேச சபையால் பராமரிக்கப்படும் மயானங்களது உரித்தை உறுதி செய்வதற்கான நில அளவைப் பத்திரங்கள், உரித்துறுதிகள் ஒப்படைப்புக் கடிதங்கள் என்பன பிரதேச சபையிடம் இல்லை. ஆகவே, அவற்றின் உரித்தை பிரதேச சபைக்கு வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டது. அதற்கமைய, நில அளவைத் திணைக்களம் நில அளவை அத்தியட்சகரிடம் அளவிடுமாறு கோரிய கடிதத்தின் பிரதியைச் சபை பெற்றுள்ளது. அதற்கமைய, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மயானங்களைச் சவீகரிப்பதற்கான நடவடிக்கை சீதாவக மற்றும் பாதுக்கை செயலகங்களுடன் இணைத்து மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | 6,124,904 | உள்ளூராட்சி நிறுவனங்கள் அறவிடும் சேவைக் கட்டணம் நகர அபிவிருத்திக்காக வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டபோதும் இனங்காணப்பட்ட செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் துரிதமாகச் செயற்பட்டு அதற்கமையச் செயற்திட்டங்களை அமுலாக்க வேண்டும். | நகர அபிவிருத்தி சபை வைப்புக் கணக்கில் உள்ள பணத்தில் கலு அக்கல வர்த்தகச் சந்தைக் கூட்டுத்தொகுதியில் கழிவறைகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 4,995,000 க்கான மதிப்பீடு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2020.08.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. தேவையான நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப்பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 47,958,426 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 25,357,963 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரித்த வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரித்த வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு

| | வருவாயினது தோற்றுவாய் | 2019 மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரித்த வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப் பட்ட வருவாய் | சேகரித்த வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 32,543 | 28,683 | 28,652 | 8,087 | 32,149 | 26,875 | 25,994 | 7,490 |
| (ii) | வாடகை | 23,428 | 26,944 | 25,470 | 2,812 | 23,445 | 24,800 | 24,235 | 886 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,101 | 1,996 | 1,996 | - | 2,016 | 2,122 | 2,122 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 273,936 | 253,892 | 185,502 | 203,510 | 212,562 | 198,691 | 212,898 | 130,504 |
| | மொத்தம் | **332,008** | **311,515** | **241,620** | **214,409** | **270,172** | **252,488** | **265,249** | **138,880** |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **தீர்வை** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான தீர்வை, வரி நிலுவையில் 3 முதல் 10 ஆண்டுகள் வரையிலான ரூபா 2,075,876 நிலுவையும் உள்ளடங்கி இருந்தது. | வருவாய் நிலுவையை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை மீதிகளில் உள்ளடங்கிய 3 தொடக்கம் 10 ஆண்டுகளுக்குரியவற்றில் உள்ளடங்கிய ரூபா 324,794.46 இனங்காணப்பட முடியாத பழைய மீதிகளாகும். பல தடவைகள் பரிசீலித்தும் அறவிட முடியாதவையாக இனங்காணப்பட்டதால் பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) ஏக்கர் வரி | | |
| பாதுக்கை உப அலுவலகத்தில் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த ஏக்கர் வரி நிலுவை ரூபா 48,561 ஆகும். அதில் ரூபா 32,725 பத்து ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். | வருவாய் நிலுவையை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எஞ்சிய நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருவாய் ரூபா 35,419,847 ஆகும். | வருவாய் நிலுவையை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 யூலை முதல் டிசெம்பர் வரை மற்றும் 2018 ஆம் ஆண்டுக்குரிய பட்டோலைகள் தற்போது தயாரிக்கப்படுகின்றன. ஆகவே, இயன்றளவு விரைவில் 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய நீதிமன்றத் தண்டப் பணத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவுடன் தெரிவிக்கின்றோம். |

### 2.2.4 பெற வேண்டிய மாகாண சபை உதவி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை பெற வேண்டியிருந்த மாகாண சபை உதவித் தொகை ரூபா 24,858,076 ஆகும். அதில் ரூபா 6,403,031 தொகையானது 1 முதல் 5 ஆண்டுகளாக பெற வேண்டியனவாகும். | பெறவேண்டிய மீதியைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய மீதியைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுசன சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது நெடுஞ்சாலைகள் போன்ற விடயங்களை முறையாக்குதல் மற்றும் நிர்வகித்தல், மக்களது சுக வாழ்வு, வசதிகள் மற்றும் நலனோம்பல் போன்ற சபையால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

### (அ) பணிகளை நிறைவேற்றுவதில் தாதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சீதாவக பிரதேச சபை 2019 ஆம் ஆண்டில் ரூபா 25,616,233 பெறுமதியான 55 நிர்மாண | திட்டமிட்டவாறு நிர்மாண வேலைகள் நிறைவேற வேண்டும். | சீதாவக பிரதேச சபை 2019 ஆம் ஆண்டில் ரூபா 25,616,233 பெறுமதியான 55 நிர்மாண |

| | | |
|---|---|---|
| வேலைகளுக்கு உடன்படிக்கைகளைச் செய்திருந்தது. 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் வேலை நிறைவேறாதிருந்தது. | | வேலைகளுக்கு உடன்படிக்கை செய்திருந்தது. |

**(ஆ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விடுதிகள் அடங்கிய வலயத்தின் நடுவே நடாத்தப்படும் வாகனப் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசும் நிலையத்திலிருந்து எழும் ஓசையால் ஏற்படும் மாசடைவு மற்றும் பிரதேச வாசிகளுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. | தாமதமின்றிப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடுதிகள் அடங்கிய வலயத்தின் நடுவே நடாத்தப்படும் வாகனப் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் வர்ணம் பூசும் நிலையத்துக்கு எதிராக அவிசாவளை மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் 54527 ஆம் இலக்கத்தின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவிக்கின்றோம். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டாம் மட்டத்திலான 06 பதவிகளிலும் ஆரம்ப மட்டத்திலான 16 பதவிகளிலும் வெற்றிடங்கள் நிலவின. | அத்தியாவசிய ஊழியர்களது வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இப் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் மாகாண அரச சேவை ஆணைக்குழுவால் நிரப்பப்பட வேண்டும் எனத் தயவுடன் தெரிவிக்கின்றோம். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 01 முதல் ஹங்வெல புதிய வர்த்தகக் கூட்டுத்தொகுதி மற்றும் ஹங்வெல பழைய வர்த்தகக் கூட்டுத்தொகுதி என்பவற்றில் உள்ள கடைகளது வாடகை மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. புதிய மதிப்பீட்டுத் தொகையை கடை உரிமையாளர்கள் | மீளாய்வு செய்யப்பட்ட பெறுமதியில் கடை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.11.01 ஆந் திகதி முதல் அமுலாகும் பொருட்டு ஹங்வெல புதிய வர்த்தகக் கூட்டுத்தொகுதியில் உள்ள கடைகள் சம்பந்தமாக விலை மதிப்புத் திணைக்களம் வழங்கிய கடை வாடகையை கடை |

| | | |
|---|---|---|
| நிராகரித்தமையால் புதிய மற்றும் பழைய கடை வாடகைக்கு இடையேயான ரூபா 3,877,650 சபைக்கு இழப்பாகியது. | | உரிமையாளர்கள் நீராகரித்து மேன்முறையீடு செய்திருந்தனர். அந்த மேன்முறையீட்டை சபை விலை மதிப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்ததன் பின்னர் மேற்குறிப்பிட்ட மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு / சபையால் ஏற்றுக்கொள்ளப்படாது அமுலாகாது இருந்தது. 2020.08.10 ஆந் திகதிய பொதுச்சபை கூட்டத்தில் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதற்கமைய, 2018.11.01 தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட கடை வாடகைப் பிரகாரம் கடை வாடகை நிலுவையும் அடங்கலாக ரூபா 3,877,650 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 773,359,759,927 பெறுமதியான 137 பொது வசதிகளுக்கான காணிகளின் எல்லைகளை இனங்கண்டு, பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டு, பெயர்ப்பலகைகளைப் பொருத்தி அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன், எல்லைகள் இனங்காணப்பட்ட பொது வசதிகளுக்காக 37 காணிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்தக் கம்பனிகளின் உரித்தை உறுதிசெய்வதற்கு எல்லைகள் இனங்காணப்பட்டு பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | நகர அபிவிருத்தி அதிகாரசபை நிர்மாணித்த ஹங்வெல்ல வாரச்சந்தையைப் பராமரித்து நடாத்துவதற்கு அதன் முழு உரித்தும் சபைக்கு வழங்கப்படாததால் இதுவரை ஹங்வெல்ல சந்தையை அங்கு நடாத்த முடியாதிருந்தது. | சுவீகரிப்பும் தொடர் நடவடிக்கையும் துரிதப்படுத்தப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி சபை பணிப்பாளர் நாயக அலுவலகத்தில் 2020.07.10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் போது ஹங்வெல்ல வாரச் சந்தையின் எஞ்சிய 100 கடைகளும் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் சபைக்கு ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டது. |
| (ஆ) | பாதுக்கை வாரச்சந்தையும் விளையாட்டு மைதானமும் 2.9425 ஹெக்டயர் காணியில் அமைக்கப்பட்டு இதுவரை சுவீகரிக்கப்படாதிருந்தன. | சுவீகரிப்பும் தொடர் நடவடிக்கையும் துரிதப்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் வாய் மூலம் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டபோதும், இக் காணியை பிரதேச சபைக்கு வழங்குவது தொடர்பாக நகர அபிவிருத்தி சபையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இவற்றை சீதாவக பிரதேச சபைக்கு வழங்குவது தொடர்பாக காணி அபிவிருத்திப் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டது. |

### 3.4.3 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
|---|---|---|
| துன்னான மயானத்தில் ரூபா 21,589,738 செலவில் நிர்மாணித்த இயந்திரம் பாவனையின்றி ஓராண்டிற்கு மேலாக இருந்தது. இங்கு பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றி மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டபோதும், அதனைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மின்மாற்றியை தாமதமின்றி பழுதுபார்த்து பொதுமக்களின் நலனுக்குப் பயன்படுத்த வேண்டும். | குறித்த ஒப்பந்த நிறுவனம் மின்மாற்றியைப் பழுதுபார்ப்பதற்கான கூறுவிலையைச் சமர்ப்பித்துள்ளது. |

**4.** **கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1** **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் பொருட்டு சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக போதிய உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை. | வினைத்திறனுடனான உள்ளகக் கணக்காய்வு அமுலாக வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் பொருட்டு உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றுள்ளது. இடைக்கிடையே அலுவலகத்தையும் பல்வேறு பிரிவுகளையும் பரிசீலித்து பிழையற்ற ஆவணங்களைப் பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**4.2** **மாகாண கணக்கீட்டுக் குழுவின் தீர்மானங்களை நிறைவேற்றாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 யூன் 14 ஆந் திகதி நடைபெற்ற மாகாண கணக்கீட்டுக் குழுவால் 2013 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினது 1:3:3(அ) பந்தி சம்பந்தமாக வழங்கப்பட்ட கட்டளை 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் அமுலாக்கப்படவில்லை. | கணக்கீட்டுக் குழுவின் கட்டளை தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். | போக்குவரத்துக்குப் பொருத்தமற்ற நிலையில் உள்ள RA-7616 ஆம் இலக்க டிறெக்டர் ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதற்காக 2020.02.28 அன்று இரண்டாம் தடவையாகவும் புதினப்பத்திரிகை விளம்பங்கள் பிரசுரிக்கப்பட்ட போதும் இதுவரை கூறுவிலை எதுவும் பெறப்படவில்லை. ஆகவே, அந்த டிரெக்டரை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வது பொருத்தமானது என 2020.02.28 ஆந் திகதியன்று நிதிக்குழு தீர்மானித்தது. போக்குவரத்துக்குப் பொருத்தமற்றிருக்கும் SL-7792 இலக்க கை டிறக்டர் கொள்வனவு செய்யப்பட்டு 10 ஆண்டுகள் ஆகாததால் கைதவிர்ப்புக்கான அங்கீகாரம் தலைமைச் செயலாளரிடமிருந்து கோரப்பட்டுள்ளது. எனினும், இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. |